

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 96

25.09.2026

லஞ்சம் கேட்டு பெற்ற மாநகர சார் ஆய்வாளர் (நில அளவை) மற்றும் தனிநபர் கைது

புகார்தாரர் திரு.S.கதிரவன், கதவு எண்.75-A/162, பென்னடம் வெங்கட்ராமன் தெரு, சிங்கமெத்தை அருகில், அம்மாபேட்டை மெயின் ரோடு, சேலம் டவுனில் வசித்து வருகிறார். புகார்தாரரின் அப்பா சண்முகத்திற்கு அவர்களுக்கு சொந்தமாக சேலம் டவுனில் இருந்த வீட்டை கடந்த 2006-ம் வருடம் புகார்தாரருக்கும் அவரது தம்பி இளங்கோவன் பெயருக்கும் இரண்டாக பிரித்து உயில் எழுதி வைத்துள்ளார். புகார்தாரரின் அப்பா கடந்த 2008ம் ஆண்டு இறந்துவிட்டதால், அவரது அப்பா எழுதி வைத்த உயில் படி புகார்தாரருக்கு பாத்தியப்பட்ட 279.சதுரடி கொண்ட வீட்டின் ஒரு பகுதியை அவரது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து, தனிப்பட்டா பெறுவதற்கு கடந்த 01.09.2026-ம் தேதி ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார். அதன்மீது நடவடிக்கை மேற்கொண்டு தனிபட்டா வழங்க ஏற்பாடு செய்வதற்காக அம்மாபேட்டை மண்டல மாநகர சார் ஆய்வாளர் (கிழக்கு), திரு.முருகேசன் அவர்கள் புகார்தாரரிடம் ரூ.5,000/- லஞ்சமாக தர வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை. சேலம் பிரிவில் கொடுத்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, இன்று 25.09.2026-ஆம் பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.முருகேசன், மாநகர சார் ஆய்வாளர் (கிழக்கு) அவர்கள் உத்தரவின்பேரில். திரு.பூவரசன். தனிநபர் புகார்தாரரிடமிருந்து ரூ.5,000/-த்தை கேட்டுப்பெற்றபோது ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

PRESS RELEASE – 96
25.09.2026

SUB INSPECTOR OF SURVEY AND A PRIVATE INDIVIDUAL WERE TRAPPED FOR DEMAND AND ACCEPTANCE OF BRIBE

The complainant**,** Tr. S. Kathiravan, is residing at Door No. 75-A/162, Pennadam Venkatrama Street, near Singarampettai, Ammapet Main Road, Salem Town, Salem. The complainant's father, Tr. Shanmugam, owned a house property in Salem Town. In the year 2006, the complainant's father executed a Will, bequeathing the said property in two equal shares to the complainant and his brother, Ilangovan. The complainant's father expired in the year 2008. As per the Will executed by his father, the complainant applied online on 01.09.2026 for a separate patta in respect of his share in the 279 sq. ft. house property**.** Tr. V. Murugesan, Sub-Inspector of Survey/Town Surveyor (East), Ammapet Zone**,** demanded a bribe of Rs.5,000/- from the complainant for taking further action and arranging for the issuance of the separate patta. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Salem detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (25.09.2026). During trap proceedings, on the instructions of Tr. V.Murugesan, Sub Inspector of Survey / Town Surveyor, Tr.Poovasan, Private individual demanded and received the bribe amount of Rs. 5,000/- from the complainant. Both the accused were arrested and sent to judicial custody.